**TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**

(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Anna Teresa Malagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.


கலைஞர் 100
1924 - 2023

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின்செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் : திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண் : 121/P&C-3/2023,** **நாள் : 02.07.2024**

பொருள் : த.நா.ம.மே.நிறுவனம்- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – மாதவிடாய் சுகாதார மேலாண்மைத் திட்டம் – NRLM ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 வட்டாரத்தில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சி அளித்தல், மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் மற்றும் அறிவுசார் மையங்கள் நிறுவிட வழிகாட்டி நெறிமுறைகள் அனுப்புதல் – சார்பு .

பார்வை :
1. NRLM ஆண்டு செயல் திட்டம் 2024-25, B.2.8.5.1 முதல் B.2.8.5.10 வரை
2. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பாணை எண்.8, நாள்: 27.06.2024

*****

பார்வையில் காணும் ஆண்டு செயல் திட்டம் 2024-25 ன்படி, மாதவிடாய் சுகாதார மேலாண்மை (**Menstrual Hygiene Management – MHM**) என்பது உடல் நலம், கல்வி, வேலை, சுற்றுப்புறம் மற்றும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று அறிந்தபோதிலும் இவைகள் ஒதுக்கப்பட்டவைகளாகவே உள்ளன. எனவே, மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த தேவையான புரிதல்களை வளர் இளம் பெண்கள், மகளிர் மற்றும் சுய உதவிக்குழுக்களிடையே ஏற்படுத்திட 37 மாவட்டங்களில் உள்ள 200 வட்டாரங்களில் வட்டாரம்) மாதவிடாய் சுகாதார மேலாண்மை திட்டம் செயல்படுத்திட மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பாணை 8ன் வாயிலாக 27.06.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மற்றும் தன்சுத்தம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சுய உதவி குழு பெண்களிடமும் கொண்டு செல்லப்படும்.


Phone : 91-44-2817 3412 / 13 / 14 Fax : 91-44-2817 3409
E-mail : tncdwho@yahoo.co.in Web : http://www.tamilnaduwomen.org

மாநில அளவில் பயிற்றுநர்களுக்கான பயிற்சி மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் (SIRD) 16.02.2024 அன்று அனைத்து மாவட்ட உதவி திட்ட அலுவலர்களுக்கும் மாநில வள பயிற்றுநர்களுக்கும் மாவட்ட வள பயிற்றுநர்களுக்கும் தேசிய வள பயிற்றுனரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட வள பயிற்றுநர்களால் 200 வட்டார வள பயிற்றுநர்களுக்கும் வட்டார வள பயிற்றுநர்களால் 6442 சமுதாய வள பயிற்றுனர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு கீழ்காணும் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

1. தேசிய வள பயிற்றுநரால் உதவி திட்ட அலுவலர்கள், மாநில /மாவட்ட வள பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

2. 37 மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 வட்டார வள பயிற்றுநர்களுக்கு 1 நாள் பயிற்சி மண்டல அளவில் மருத்துவர் மற்றும் மாவட்ட வள பயிற்றுநர்களால் வழங்கப்பட வேண்டும்.

3. 200 வட்டாரத்தில் உள்ள 6442 சமுதாய வள பயிற்றுநர்களுக்கு 1 நாள் பயிற்சி வட்டார வள பயிற்றுநர்களால் வழங்கப்பட வேண்டும்.

4. 200 வட்டாரத்திலுள்ள மகளிர் நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு பள்ளி அளவில் 50 முதல் 100 மாணவிகளுக்கு ஒரு அமர்வு வீதம் ஒரு வட்டாரத்திற்கு 10 விழிப்புணர்வு கூட்டங்கள் வட்டார வள பயிற்றுநர்களால் மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

5. 200 வட்டாரத்திலுள்ள கல்லூரிகளில் பயிலும் வளர் இளம் பெண்களுக்கு கல்லூரி அளவில் 50 முதல் 100 மாணவிகளுக்கு ஒரு அமர்வு வீதம் ஒரு வட்டாரத்திற்கு ஒரு விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட வள பயிற்றுநர்கள் மூலம் மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

6. 200 வட்டாரத்திலுள்ள 6442 ஊராட்சிகளிலுள்ள அனைத்து மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும் ஊராட்சி அளவில் 50 முதல் 100 உறுப்பினர்களுக்கு ஒரு அமர்வு வீதம் 30 விழிப்புணர்வு கூட்டங்கள் சமுதாய வள பயிற்றுநர்களுக்கு 1 நாள் பயிற்சி வட்டார வள பயிற்றுநர்களால் வழங்கப்பட வேண்டும்.

பயிற்சிகளுக்கான செலவின விபரம்

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | தொகை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | உதவித்திட்ட அலுவலர்கள், மாநில/மாவட்ட வள பயிற்றுநர்களுக்கு மாநில அளவிலான 2 நாள் பயிற்சி | 2 | 1.86 | 372 |
| 2 | வட்டார வள பயிற்றுநருக்கான 2 நாள் பயிற்சி | 5 | 1.70 | 8.48 |
| 3 | பள்ளி மாணவிகளுக்கான பயிற்சி | 2000 | 0.02 | 40.00 |
| 4 | கல்லூரி மாணவிகளுக்கான பயிற்சி | 200 | 0.015 | 3.00 |
| 5 | மகளிர் சுய உதவிக்குழுவினருக்கான பயிற்சி | 6000 | 0.015 | 120.00 |
| | மொத்தம் | | | 543.48 |

## மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் (MHM Council)

மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தேவைகள் குறித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் பிரச்சனைகளை ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கும் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் அமைக்கப்பட வேண்டும்.

மாதவிடாய் சுகாதார மேலாண்மை செயல்பாடுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட வட்டாரத்தில் உள்ள பெண்கள் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (2) இரண்டு மன்றமும், கல்லூரிகளில் (1) ஒன்று மன்றமும், பாலின வள மையத்தில் (1) ஒன்றும், சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் (1) ஒன்றும் என ஒரு வட்டாரத்திற்கு 5 மன்றங்கள் வீதம் 200 வட்டாரங்களில் 1000 மன்றங்கள் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மன்றத்திற்கும் ரூ.20,000/-வழங்கப்படும்.

மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றத்திற்கு வழங்கப்படும் நிதியில் செலவினங்கள் செய்யப்பட்டு மீதம் இருப்பில் உள்ள நிதியினை வங்கி கணக்கிலேயே பராமரித்து வங்கி மூலம் கிடைக்கப் பெறும் வட்டி நிதியில் மன்றமானது மாதவிடாய் சுகாதாரம் சார்ந்த செயல்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

## அறிவுசார் மையம் (Knowledge Centre)

மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்து வளரிளம் பெண்கள் இடையே உள்ள தவறான கருத்துக்களை களைவதும், பெண்களிடையே மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதும் தலையாய கடமையாகும். இதன் அடிப்படையில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மற்றும் தன்சுத்தம் குறித்த விழிப்புணர்வை பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சுய உதவி குழு பெண்களிடமும் கொண்டு

செல்ல திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி மாதவிடாய் சுகாதார மேலாண்மை அறிவுசார் மையம் அமைக்கப்பட வேண்டும்.

அறிவுசார் மையமானது மாதவிடாய் சுகாதார மேலாண்மை செயல்பாடுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட வட்டாரத்தில் அமைக்கப்படும் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் பெண்கள் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் (2) இரண்டு மையமும், கல்லூரிகளில் (1) ஒரு மையமும், வட்டாரத்தில் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் (1) ஒரு மையமும், பாலின வள மையத்தில் (1) ஒரு மையமும் என ஒரு வட்டாரத்திற்கு 5 மையங்கள் வீதம் 200 வட்டாரங்களில் 1000 மையங்கள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.5,000/- வழங்கப்படும்.

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | தொகை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் (MHM Council)<br>பள்ளிகளில் – 2<br>கல்லூரி – 1<br>பாலின வள மையம் – 1<br>சிறப்பாக செயல்படும் ஊராட்சியில் – 1 | 1000 | 0.20 | 200.00 |
| 2 | அறிவுசார் மையம் (Knowledge Centre)<br>பள்ளிகளில் – 2<br>கல்லூரி – 1<br>பாலின வள மையம் – 1<br>சிறப்பாக செயல்படும் ஊராட்சியில் – 1 | 1000 | 0.05 | 50.00 |

போட்டிகள் :

தேர்ந்தெடுக்கப்பட்ட 200 வட்டாரங்களிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு அளவில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இப்போட்டிகளை பள்ளி, கல்லூரிகளுடன் இணைந்து மாதவிடாய் சுகாதார மன்றம் மற்றும் அறிவுசார் மையங்கள் வழி நடத்தி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள செய்ய வேண்டும். மாவட்ட/மாநில அளவில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கிட கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | தொகை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பள்ளி/கல்லூரிகளுக்கான மாவட்ட அளவிலான போட்டிகள் | 37 | 0.20 | 7.40 |
| 2 | பள்ளி/கல்லூரிகளுக்கான மாநில அளவிலான போட்டிகள் | 1 | 2.00 | 2.00 |
| மொத்தம் | | | | 9.40 |

**மாதவிடாய் சுகாதார பயிற்சி கையேடுகள்:**

மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தேவைகள் குறித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ரூ.30. இலட்சம் மதிப்பில் நிறங்கள் கையேடுகள் தயாரிக்கப்பட்டு பயிற்றுநர்களுக்கு வழங்கப்பட உள்ளது. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சி வகுப்புகளில் பயன்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி விபரம்

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | தொகை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | உதவித்திட்ட அலுவலர்கள், மாநில/மாவட்ட வள பயிற்றுநர்களுக்கு மாநில அளவிலான 2 நாள் பயிற்சி | 2 | 1.86 | 3.72 |
| 2 | வட்டார வள பயிற்றுநருக்கான 2 நாள் பயிற்சி | 5 | 1.70 | 8.48 |
| 3 | பள்ளி மாணவிகளுக்கான பயிற்சி | 2000 | 0.02 | 40.00 |
| 4 | கல்லூரி மாணவிகளுக்கான பயிற்சி | 200 | 0.015 | 3.00 |
| 5 | மகளிர் சுய உதவிக்குழுவினருக்கான பயிற்சி | 6000 | 0.015 | 120.00 |
| 6 | மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் (MHM Council) | 1000 | 0.20 | 200.00 |
| 7 | அறிவுசார் மையம் (Knowledge Centre) | 1000 | 0.05 | 50.00 |
| 8 | பள்ளி/கல்லூரிகளுக்கான மாவட்ட அளவிலான போட்டிகள் | 37 | 0.20 | 7.40 |
| 9 | பள்ளி/கல்லூரிகளுக்கான மாநில அளவிலான போட்டிகள் | 1 | 2.00 | 2.00 |
| 10 | நிறங்கள் பயிற்சி கையேடு | 10000 | | 30.00 |
| மொத்த ஒதுக்கீடு | | | | 464.60 |

மேற்கண்டவாறு கணக்கீடுகளின் அடிப்படையில் மாவட்டவாரியாக மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சிகள் நடத்திடவும், மாதவிடாய் சுகாதார மேலாண்மை குழு மற்றும் அறிவுசார் மையங்கள் நிறுவிடவும், பள்ளிகள், கல்லூரிகளில் மாவட்ட/மாநில அளவிலான போட்டிகள் நடத்திடவும் திட்ட இயக்குநர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்செலவினங்களை " NRLM 2024–25 ஆம் ஆண்டு செயல் திட்டத்தில், B 2.8.5.1 முதல் B2.8.5.10 வரையிலானத் திட்டக் கணக்கில்" மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணைப்பு : மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் & அறிவுசார் மைய வழிகாட்டி நெறிமுறைகள்

ஒம்/–
மேலாண்மை இயக்குநர்
த.நா.ம.மே.நிறுவனம்

//உண்மை நகல் உத்தரவுபடி//

கூடுதல் இயக்குநர் (P&C)
த.நா.ம.மே.நிறுவனம்

# மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம்

# மற்றும் அறிவுசார் மையங்கள் வழிகாட்டி நெறிமுறைகள்

## மாதவிடாய் சுகாதார மேலாண்மை

மாதவிடாய் சுகாதார மேலாண்மை (Menstrual Hygiene Management – MHM) அல்லது பாதுகாப்பான சுகாதாரமான மாதவிடாய் என்பது உடல் நலம், கல்வி, வேலை, சுற்றுப்புறம் மற்றும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று அறிந்த போதிலும் இவைகள் ஒதுக்கப்பட்டவைகளாகவே உள்ளன. எனவே, மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த தேவையான புரிதல்களை வளர் இளம் பெண்கள், மகளிர் மற்றும் சமூகத்தினரிடையே (குறிப்பாக சமபங்குதாரர்களான ஆண்களிடமும்) ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

## மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் (MHM Council) :

மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தேவைகள் குறித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் பிரச்சனைகளை ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கும் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் அமைக்கப்படுகிறது.

. மாதவிடாய் சுகாதார மேலாண்மை செயல்பாடுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட வட்டாரத்தில் உள்ள பெண்கள் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (2) இரண்டு மன்றமும், கல்லூரிகளில் (1) ஒரு மன்றமும், சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் (1) ஒரு மன்றமும், பாலின வள மையத்தில் (1) ஒரு மன்றமும் என ஒரு வட்டாரத்திற்கு 5 மன்றங்கள் வீதம் 200 வட்டாரங்களில் 1000 மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

## பள்ளி அளவில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்ற உறுப்பினர்கள்

- ஊ.ம.தலைவர்–1 (Panchayat President)
- பள்ளி ஆசிரியை –1 (School Teacher)
- பெண் ஊராட்சி மன்ற உறுப்பினர்–1 ( Women Ward Member)
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயற்குழு உறுப்பினர்கள் –2 (PLF)
- சமுதாய வள பயிற்றுநர் – 1 (CRP)
- பள்ளி மாணவித் தலைவி / மாணவிகள் – 3 (School People Leader)
- பெண் சுகாதார தன்னார்வலர் (மக்களை தேடி மருத்துவம்) – 1 (WHV)
- அங்கன்வாடி பணியாளர் –1 (ICDS Worker)
- நம் தோழி ( பாலின சுற்றுனர்) –1 (Gender Point Person–GPP)
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சமூக செயல்பாட்டு குழு உறுப்பினர்–1 (PLF–SAC)

பள்ளி மேலாண்மை மன்றத்தில் குறைந்த பட்சம் 9 உறுப்பினர்களும் அதிகபட்சம் 12 உறுப்பினர்களும் இருக்கலாம்.

**கல்லூரி அளவில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்ற உறுப்பினர்கள்**

- ஊ.ம.தலைவர்–1 (கல்லூரி அமைவிடம் உட்பட்ட)
- விரிவுரையாளர் / பேராசிரியை –1
- பெண் ஊ. ஒன்றிய குழு உறுப்பினர்–1 (Union Councillor)
- வட்டார வள பயிற்றுனர் – 1 (BRP)
- கல்லூரி மாணவித் தலைவி / மாணவிகள் –3
- வட்டார அளவிலான கூட்டமைப்பு செயற்குழு உறுப்பினர்கள் –2 (BLF)
- வட்டார அளவிலான பாலின மன்ற உறுப்பினர் –1 (BLGF)
- வட்டார மருத்துவர் அலுவலர்–1 (BMO)
- வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் –1

கல்லூரி மேலாண்மை மன்றத்தில் குறைந்த பட்சம் 9 உறுப்பினர்களும் அதிகபட்சம் 12 உறுப்பினர்களும் இருக்கலாம். கல்லூரிகள், அரசு கல்லூரிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளாகவும் இருக்கலாம்.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்ற உறுப்பினர்கள்**

- ஊ.ம.தலைவர்–1
- பெண் ஊ.ம உறுப்பினர்–1
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் –2
- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர் – 1
- வட்டார இயக்க மேலாளர் அல்லது ஒருங்கிணைப்பாளர் – 1
- சமுதாய வளப் பயிற்றுனர் – 1
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் – 2
- பெண் சுகாதார தன்னார்வலர் (மக்களை தேடி மருத்துவம்) – 1
- அங்கன்வாடி பணியாளர் – 1
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சமூக செயல்பாட்டு குழு உறுப்பினர்–1

இந்த ஆலோசனைக் குழுவில் குறைந்த பட்சம் 9 உறுப்பினர்களும் அதிகபட்சம் 12 உறுப்பினர்களும் இருக்கலாம்.

**பாலின வள மைய மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்ற உறுப்பினர்கள்**

- வட்டார வளர்ச்சி அலுவலர் –1
- பெண் ஊ. ஒன்றிய குழு உறுப்பினர்–1
- வட்டார அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் –2
- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர் – 1

- வட்டார இயக்க மேலாளர் அல்லது ஒருங்கிணைப்பாளர் – 1 (BMM/BC)
- வட்டார வளப் பயிற்றுனர் – 1 (BRP)
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயற்குழு உறுப்பினர்கள் – 2
- பெண் சுகாதார தன்னார்வலர் (மக்களை தேடி மருத்துவம்) – 1
- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட திட்ட அலுவலர் –1
- பாலின வள மைய வழிகாட்டி குழு உறுப்பினர் – 1

இந்த ஆலோசனைக் குழுவில் குறைந்த பட்சம் 9 உறுப்பினர்களும் அதிகபட்சம் 12 உறுப்பினர்களும் இருக்கலாம்.

**பள்ளி, கல்லூரி மற்றும் பாலின வள மையம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மேலாண்மை மன்றத்தின் செயல்பாடுகள்**

- ஒவ்வொரு மன்றத்திற்கும் ஆதாரநிதி / சுழல்நிதியாக ரூ.20,000/– வழங்கப்படும், மன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை தீர்மானத்துடன் செயல்பாடுகள் மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்..
- பள்ளி அளவில் மன்றத்தின் வங்கி கணக்கு சம்மந்தப்பட்ட பள்ளி ஆசிரியர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் இணைந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "…………………………………………**பள்ளி மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம்**" என்ற பெயரில் துவங்கி செயல்படுத்தப்பட வேண்டும்..
- கல்லூரி அளவில் மன்றத்தின் வங்கி கணக்கு சம்மந்தப்பட்ட கல்லூரி பேராசிரியருடன் இணைந்து வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் இணைந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "……………………………………**கல்லூரி மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம்**" என்ற பெயரில் துவங்கி செயல்படுத்தப்பட வேண்டும்..
- வட்டார/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் தனியாக மேலாண்மை மன்றத்தின் பெயரில் வங்கி கணக்கு துவங்கி செயல்படுத்திட வேண்டும்.
- இந்த மேலாண்மை மன்றங்கள், பள்ளிக் கட்டிடம், கல்லூரிக் கட்டிடம், வட்டார கூட்டமைப்பு கட்டிடம், வானவில்மையம், கிராம பொது சேவை மைய கட்டிடம், என சாதகமாக இருக்கும் இடத்தில் அமைக்கப்பட்டு மாதந்திர கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

- பள்ளிக் கல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறையுடன் கலந்தாலோசித்து மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் தகுந்த இடங்களில் அமைக்கப்பட வேண்டும்.
- இந்த மேலாண்மை மன்றங்கள் மூலம் பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சுய உதவிக் குழு மகளிருக்கு மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். மேலும் பிரச்சனைகள் மற்றும் சந்தேகங்கள் குறித்து விளக்கப்பட வேண்டும்.
- மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தேவைகள் குறித்தும், ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பள்ளி, கல்லூரி மாணவிகள் வட்டார/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கன் மற்றும் நிர்வாகிகள் அவ்வப்போது எழுப்பப்படும் பிரச்சனைகள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட வேண்டும்.
- பள்ளி / கல்லூரிகளில் வளர் இளம் பெண்களுக்கு சுகாதாரமான சானிடரி நாப்கின்கள் கிடைக்க உறுதி செய்தல்.
- ஊராட்சியிலுள்ள பள்ளி / கல்லூரிகளில் வளர் இளம் பெண்களுக்கான சானிடரி நாப்கின் Vending Machine நிறுவுதல் மற்றும் நாப்கின்கள் தொடர்ச்சியாக கிடைக்க செய்ய வேண்டும்.
- பள்ளி. கல்லூரிகளில், தண்ணீர் வசதியுடன் கூடிய சுகாதாரமான கழிப்பறை இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- மூடியுடன் கூடிய குப்பைத் தொட்டிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ( பள்ளி கல்லூரி குழு (ம) கூட்டமைப்பு கட்டிடங்களில் .)
- துவக்கமாக ஒரு மன்றத்திற்கு ஒரு எரியூட்டியினை பள்ளி / கல்லூரி மற்றும் கூட்டமைப்பு கட்டிடங்களில் அமைக்க வேண்டும்.
- வங்கி மூலம் கிடைக்கப் பெறும் வட்டி நிதியில் மன்றமானது மாதவிடாய் சுகாதாரம் சார்ந்த செயல்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.
- மாதவிடாய் சுகாதாரம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மருத்துவர் / சுகாதார செவிலியர் ஆகியோரை கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

- மாதவிடாய் காலத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஊட்டச்சத்து மிக்க உணவுகள் குறித்த விழிப்புணர்வுகள் கொடுக்க வேண்டும்.
- பள்ளி / கல்லூரி / மகளிர் குழுக்களில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை பற்றிய பயிற்சி அளிப்பதை உறுதியளிக்க செய்தல். தீர்மான பதிவேடுகளை பராமரித்தல். சுகாதாரமான சானிடரி நாப்கின் அமைப்புகளை ஒருங்கிணைத்தல்.
- பள்ளி மற்றும் கல்லூரியில் தானியங்கி சானிடரி நாப்கின் வழங்கும் இயந்திரம் இல்லையெனில் அது அங்கு வைக்கப்படுவதற்கும் தொடர்ந்து சானிடரி நாப்கின்கள் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்,
- பள்ளி மற்றும் கல்லூரியில் திடக்கழிவு மேலாண்மையில் நாப்கின்களை தனியாக எரியூட்டும் அல்லது மறுசுழற்சி செய்யும் திட்டத்தினை செயல்படுத்த துவக்கமாக ஒரு மன்றத்திற்கு ஒரு எரியூட்டியினை வழங்கலாம்.
- இந்த மேலாண்மை மன்றங்கள் பள்ளி , கல்லூரி மாணவிகள் மற்றும் சுய உதவிக் குழு மகளிருக்கு மாதவிடாய் சுகாதாரம், தண்ணீர் மற்றும் உடல் நலம் குறித்த சந்தேகங்கள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் மையமாக செயல்படும்.
- நாப்கின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை கண்டறிந்து அதன் மூலம் பள்ளி ,கல்லூரி மாணவிகளுக்கு நாப்கின்கள் தரமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாதவிடாய் சுகாதார மேலாண்மை அறிவுசார் மையங்கள் (MHM Knowledge Center):**

மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்து வளரிளம் பெண்கள் இடையே உள்ள தவறான கருத்துக்களை களைவதும், பெண்களிடையே மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்துவது தலையாய கடமையாகும். இதன் அடிப்படையில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மற்றும் தன் சுத்தம் குறித்த விழிப்புணர்வை பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சுய உதவி குழு பெண்களிடமும் கொண்டு செல்ல **மாதவிடாய் சுகாதார மேலாண்மை அறிவுசார் மையங்கள்** அவசியமாகும். **(Knowledge Center)**

அறிவுசார் மையமானது மாதவிடாய் சுகாதார மேலாண்மை செயல்பாடுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட வட்டாரத்தில் அமைக்கப்படும் மாதவிடாய்

சுகாதார மேலாண்மை மன்றம் அமைக்கப்பட்ட இடங்களில், பெண்கள் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (2) இரண்டு மையமும், மகளிர் கல்லூரிகளில் (1) ஒரு மையமும், வட்டாரத்திற்கு மிக அருகில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் (1) ஒரு மையமும், பாலின வள மையத்தில் (1) ஒரு மையமும் என ஒரு வட்டாரத்திற்கு 5 மையங்கள் வீதம் 200 வட்டாரங்களில் 1000 மையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

- ஒவ்வொரு மையத்திற்கும் ஆதாரநிதி / சுழல்நிதியாக ரூ.5,000/- மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்ற கணக்கிலேயே வழங்கப்பட வேண்டும். தனியாக வங்கி கணக்கு துவங்கப்பட வேண்டியதில்லை, மன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை தீர்மானத்துடன் செயல்பாடுகள் மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்..
- பள்ளிகள், கல்லூரிகள், வட்டார/ஊராட்சி அளவிலான கூட்மைப்பு அலுவலகங்களில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றங்கள் அமைக்கப்பட்ட 5 இடங்களில் இந்த அறிவு சார்மையங்கள் 5 அமைக்கப்பட வேண்டும்.
- பள்ளிக் கல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறையுடன் கலந்தாலோசித்து மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் பள்ளி மற்றும் கல்லூரிகளில் அறிவு சார்மையங்கள் தகுந்த இடங்களில் அமைக்கப்பட வேண்டும்.
- மாதவிடாய் சுகாதார சம்மந்தமான சுவரொட்டிகள், சுவர் ஓவியங்கள், கைப்பிரதிகள், போன்றவை அறிவுமையங்களில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.
- அறிவுசார் மையத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மாதவிடாய் சுகாதாரம் குறித்து ஆலோசனை வழங்க தன்னார்வலர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். தன்னார்வலர்கள் பள்ளி, கல்லூரிகளில் மாணவிகளாகவும், சுய உதவி குழுக்களில் சுய உதவி குழு உறுப்பினராகவும் இருக்க வேண்டும்.

அறிவுசார் மையத்தின் செயல்பாடுகள்

- மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு கையேடு, விழிப்புணர்வு சுவரொட்டிகள், மாதவிடாய் குறித்த புத்தகங்கள் வைக்கப்பட வேண்டும்.

- மாதவிடாய் சுகாதாரத்திற்கான சானிடரி நாப்கின்கள் குறைந்த விலையில் மகளிர் சுய உதவி குழுக்களிடமிருந்து பெற வழிவகை செய்ய வேண்டும்.
- வளரிளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து உணவு, பாலினம் குறித்த கைப்பிரிதிகள் பராமரிக்க வேண்டும்.
- பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தன் சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்த கையேடுகளைப் பராமரித்தல்.
- அறிவுசார் மையங்களில் மூன்று மாத்திற்கு ஒரு முறை கருத்துப் பட்டறைகள், அனுபவப் பகிர்வு போன்றவை நடத்தப்பட வேண்டும்.
- மாதவிடாய் குறித்த ஓவியங்கள், புகைப்படங்கள், ஊடகச் செய்திகள் ஆகியவற்றை தொகுத்து வைக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் மாதம் ஒரு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட வேண்டும்
- அறிவுசார் மையங்களில் வட்டார/மாவட்ட அளவில் உடல்நலம், தன்சுத்தம் மற்றும் மாதவிடாய் சுகாதாரம் குறித்த பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட வேண்டும்.
- பள்ளி, கல்லூரிகளில் குறிப்பிட்ட நேரத்தில் உடல்நலம், தன்சுத்தம் மற்றும் மாதவிடாய் சுகாதாரம் குறித்த செய்திகளை தினம் ஒரு தகவலாக ஒலிபெருக்கியில் அறிவிக்கச் செய்ய வேண்டும்.
- மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றங்கள் மற்றும் அறிவுசார் மையங்களில் பெண்கள், குழந்தைகள், முதியோர், காவல் மற்றும் வானவில் மைய இலவச சேவை எண்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஒம்/-
மேலாண்மை இயக்குநர்
த.நா.ம.மே.நிறுவனம்

க. முத்துமணி 2/7/24
கூடுதல் இயக்குநர் (F&C)
த.நா.ம.மே.நிறுவனம்

M. [signature]
2/7/24